# 6

# புதுவருடப் பிறப்பு



## பண்டிகை

பண்டிகை என்ற சொல் பெருநாள், விசேட நாள் என்னும் பொருளைத் தரும். சமயம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் பல்வேறு வழிபாடுகள், விருந்துகளுடன் கொண்டாடப்படுவது பண்டிகையாகும். பண்டிகைகள் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகளைத் தருகின்றன.

பண்டிகை நாட்களில் மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, புத்தாடை அணிவர். அதன் பின்னர் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவர். விசேட உணவு வகைகளைத் தயாரித்து, உற்றார் உறவினருக்கும் ஏழைகளுக்கும் பகிர்ந்தளித்து உண்பர்.

## பண்டிகை நாட்களில் இறைவழிபாட்டில் ஈடுபடுதல்

நாம் விரும்பும் பொருள்களை எல்லாம் பண்டிகை என்ற பெயரால் இறைவனோடு சம்பந்தப்படுத்துகின்றோம். அப்பண்டிகை நாட்களில் செய்யும் பல்வேறு சிறப்புக் கருமங்களை இறைவனுக்கு அர்ப்பணிக்கும்போது எம் மனதில் திருப்தி ஏற்படுகின்றது. எல்லாப் பொருட்களிலும் கடவுளைக் காணும் பக்குவத்தைப் பண்டிகைகளும், விழாக்களும் ஏற்படுத்துகின்றன. சுவையாய் உண்பதும், புத்தாடை அணிவதும், மகிழ்ச்சியாக இருப்பதுங்கூட இறைவனின் அருளினாலேதான் என்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் உணரலாம் அல்லவா?

## பண்டிகையின் நன்மைகள்

உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று வாழ்த்துக் கூறுதல், அளவளாவி மகிழ்தல், குடும்பத்தினரிடையே இருந்த மனக் கசப்புக்களை மறந்து உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதல், குடும்ப அங்கத்தவரிடையே நெருக்கத்தையும் அன்புப் பிணைப்பையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் முதலானவை பண்டிகைகளால் உண்டாகும் நன்மைகளாக அமைகின்றன. உணவைச் சுருக்குதல், ஒழித்தல் விரதத்தின் ஆதாரமாய் இருக்க, பலவகை உணவுகளை எல்லோரும் கூடியுண்ணும் விருந்து வைபவமாய் பண்டிகைகள் விளங்குதல் குறிப்பிடத்தக்கது. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி முதலியன நாம் கொண்டாடும் பண்டிகைகளாகும்.

## சித்திரை வருடப் பிறப்பு



பன்னிரு மாதங்களைக் கொண்டது ஒரு வருடம். சூரியன் ஒவ்வொரு ராசியிலும் சஞ்சரிக்கும் காலப்பகுதியே மாதங்களாகக் கொள்ளப்படுகிறது. பன்னிரு இராசிகளுள் முதலாவதான மேடராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம், சித்திரை மாதமாகும். சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாளையே புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம். இப்புதுநாளில் நாம் அனுபவித்த துன்ப, துயரங்கள் மறையும்; பழைய பகைமைகள் நீங்கும்; புத்தெழுச்சியும், புத்துணர்வும் ஏற்படும்; சகல நன்மைகளும், மங்களமும் உண்டாகும். இப்புத்தாண்டு தினத்தில் சூரியதேவனுக்குப் பொங்கல் பொங்கி வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது.

## புதுவருடப் பிறப்புப் பாரம்பரியங்கள்

ஆலயங்களில் அர்ச்சகர்கள் மருத்துவகுணமுடைய இலைகள், பூ வகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரில் இட்டுக் காய்ச்சி மருத்து நீர் தயாரிப்பார்கள். இம் மருத்துநீரைக் காணிக்கை செலுத்திப் பெற்று வந்து தந்தை, தாய் அல்லது பெரியவர்களைக் கொண்டு தலையில் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும். வருடம் பிறக்கும் புண்ணிய காலத்தில் வீட்டில் பொங்கலிட்டு, பூசை செய்தல் வேண்டும். அன்றைய தினம் புத்தாடை அணிந்து மங்கலப்பொருட்களைத் தரிசிப்பதும் வழக்கமாகும். ஆலய வழிபாடு செய்தலும் தந்தை, தாய், குரு, பெரியோர், உறவினர்களிடம் ஆசி பெறுதலும், முக்கியமானவையாகும்.



அறுசுவை உணவு உண்ணல், கைவிசேடம் பெறுதல், வகை வகையான பாரம்பரிய பலகாரங்கள், உணவுப் பண்டங்கள் உண்டு மகிழல் என்பன வருடப் பிறப்பின் சந்தோஷமான நிகழ்வுகளாகும். கைப்புச் சுவையுடைய வேப்பம் பூவையும், இனிப்புச் சுவையுடைய கரும்பு வெல்லத்தையும் சேர்த்துப் பக்குவப்படுத்தி அன்றைய தினம் உண்பது, வாழ்வில் எதிர்கொள்ளும் இன்ப, துன்பங்களைச் சமமாகக் காணும் பக்குவம் வரவேண்டும் என்பதற்காகவேயாகும்.



மன மகிழ்ச்சி தரும் மரபுவழி விளையாட்டுக்களில் ஈடுபடுதல், உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று நலம் விசாரித்து மகிழ்தல், புதுக்கணக்குப் பதிதல், ஏர் மங்கலம், வித்தியாரம்பம் போன்றவை செய்தலும் புதுவருடத்துச் சிறப்பம்சங்களாகும். மக்கள் தமது வேலைகளைப் புத்தாண்டு பிறந்த பின் சுபநேரத்தில் ஆரம்பிப்பார்கள். அத்துடன் புதுப் பஞ்சாங்கம் பார்த்து அவ்வருடப் பலன்களை அறிந்து கொள்ளுதலும் மரபாகும்.

## பயிற்சி

1. பண்டிகை என்றால் என்ன?
2. பண்டிகைகளைக் கொண்டாடுவதால் உண்டாகும் நன்மைகள் மூன்று கூறுக.
3. புதுவருடப் பிறப்பை எப்போது நாம் கொண்டாடுகிறோம்?
4. மருத்துநீர் யாரால், எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?
5. புதுவருடத் தினத்தன்று நாம் ஆரம்பிக்கும் நாட்காரியங்கள் எவை?

## குழுச் செயற்பாடு

புதுவருடப் பிறப்பன்று நீங்கள் செய்த நற்காரியங்கள் பற்றிப் 'பேச்சு' ஒன்றை நிகழ்த்துங்கள்.